

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் உடல்நலக் குறைவால் காலமான நாகாலாந்து மாநில ஆளுநர் இல. கணேசன் அவர்களின் உடல் வைக்கப்பட்டுள்ள தியாகராய நகரிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு திடலிற்கு நேற்று(16.8.2025) நேரில் சென்று தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான நயினார் நாகேந்திரன், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எச். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே ஆகியோர் உள்ளனர்.

# பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அளித்தல் ஆகியவற்றில் துரித நடவடிக்கை தேவைப்படுவதாக தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதலாக, அவசரக் கடன் வரி உத்தரவாதத் திட்டத்தின் கீழ் (ECLGS) 30% பிணையமில்லாத கடன்களை 5% வட்டி மானியம் மற்றும் அசலைத் திருப்பிச் செலுத்துதலில் இரண்டு ஆண்டு தற்காலிக தடையுடன் நீட்டித்தல், RoDTEP நன்மைகளை 5% ஆக உயர்த்துதல், நூல் உட்பட அனைத்து ஜவுளி ஏற்றுமதிகளுக்கும் முன் மற்றும் பின் கடனை நீட்டித்தல் ஆகியவை நமது ஏற்றுமதி போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்கான பிற முக்கியமான காரணிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

**உற்பத்தித் துறைக்கு கடும் அச்சுறுத்தல்!**

உலகளாவிய வர்த்தகத்தில் சுங்க வரி தாக்கங்கள் மற்றும் போட்டி அழுத்தங்கள் காரணமாக மற்ற துறைகளும் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்கின்றன என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அதற்கு உடனடி நிவாரணம் வழங்கி, பணப்புழக்கத்தை மேம்படுத்தவும், செலவுச் சுமைகளைக் குறைக்கவும் சுங்கவரிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் சிறப்பு வட்டி மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதையும், அதிக சுங்க வரி சந்தை அபாயங்களை ஈடுகட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள்) மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை விரைவுபடுத்து வதையும் ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் செயல்படுத்தப்பட்டதைப் போன்று, அசலைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகை உள்ளிட்ட ஒரு சிறப்பு நிதி நிவாரணத் தொகுப்பு நமது ஏற்றுமதியாளர்களை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்றும், பிரேசில் அரசு அந்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு வரி ஒத்திவைப்பு மற்றும் வரிச் சலுகைகளை அறிவித்துள்ளதைப் போன்று, இந்தியாவிலும் இதுபோன்ற ஒரு முயற்சியை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் வலுவான உற்பத்தித் துறை, இதுவரை கண்டிராத ஒரு நெருக்கடியை தற்போது எதிர்கொள்வதாகவும், பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி யிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த விஷயத்தில் அவசரமாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் தொழில்துறையைச்சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அதோடு, இந்த இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்டெடுக்கவும் ஒன்றிய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு முழு ஒத்துழைப்பினை வழங்கும் எனவும் தனது கடிதத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

## முரசொலி மாறன் 92வது பிறந்தநாள் : இன்று

# முதல்வர் - தலைவர் தருமபுரியில் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கிறார்!

## முரசொலி வளாகத்தில் உள்ள சிலைக்கு – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை!

**சென்னை, ஆக. 17-**

**தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், ஏற்கனவே திட்ட மிட்டபடி தருமபுரியில் பல்வேறு நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளவிருப்பதால்;**

**முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் - ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், இன்று (ஆகஸ்ட் 17) தருமபுரியில் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.**

**அதே நேரத்தில் இன்று (17.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு**



**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மலர் மாலை அணிவித்து, திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.**

**அதுபோது ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**- சென்னை மாவட்ட தி.மு.க.**

## 'திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணி' என

# தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை இழந்து விட்டோம்!

## திராவிட இயக்க எழுத்தாளர் திருவாரூர் அர.திருவிடம் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக. 17-**

**திராவிட இயக்க எழுத்தாளரும் தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளருமான திருவாரூர் அர.திருவிடம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,**

**"திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணியெனத் தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை நாம் இழந்துவிட்டோம்!" என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**

'திராவிட இயக்க எழுத்தாளரும், தி.மு.கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிப் பேரவைச் செயலாளருமான திருவாரூர். அர. திருவிடம் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

தந்தை பெரியாரின் பெருந்தொண்டராக விளங்கிய திருவாரூர் தண்டவாளம் அரங்கராஜ் அவர்களின் புதல்வரும், திராவிட இயக்க எழுத்தாளரும், தி.மு.கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிப் பேரவைச் செயலாளருமான திருவாரூர். அர. திருவிடம் அவர்கள் மறைந்தார் என்று அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

அர. திருவிடம் அவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை அனைவரிடத்திலும் கொண்டு சேர்க்க 1972 ஜூன் முதல் வார இதழாக வெளிவந்த 'திருவிடம்' எனும் இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். திராவிட இயக்க முன்னோடி



களின் படங்களை முகப்பில் ஏந்தி, பல முன்னணி திராவிட அறிஞர்களின் படைப்புகளையும், பகுத்தறிவுப் புதையலான கட்டுரைகளையும் கொண்டு இது வெளியாகி வந்தது.

கலைஞரின் காலடிச் சுவடுகள். கலைஞர் 100: சகாப்தமும் சாமான்யனும், காந்தி – கோட்சே, தி.மு.க. பெற்ற வெற்றிகளும் வீரத் தழும்புகளும், திராவிடப் புதையல், தூக்கு வேண்டாம் துப்பாக்கியால் சுடு என எண்ணற்ற நூல்களைத் தொடர்ந்து எழுதி வந்து அறிவுப் பங்களிப்பினைச் செய்து வந்தவர் அர. திருவிடம் அவர்கள்.

அர. திருவிடம் அவர்கள் எழுதி சீதை பதிப்பகத்தின் வெளியீடாக வந்த 'திருவல்லிக் கேணி முதல் திருவாரூர் வரை' எனும் முக்கிய வரலாற்று நூலினை 2019ஆம் ஆண்டு கழக இளைஞரணிச் செயலாளர் இன்றைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டிருந்தார் என்பதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

அர. திருவிடம் அவர்களின் செறிவான பங்களிப்புகளுக்கு அங்கீகாரமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் சிறப்பு நேர்வாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் 'இலக்கிய மாமணி' விருது இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

குடும்பம் குடும்பமாக, வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக இயக்கம் வளர்க்கும் திராவிட இயக்கத்தின் மரபில், தனது தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணி எனத் தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை நாம் இழந்துவிட்டோம். ஆற்றல்மிகு கொள்கைப் பிடிப்பாளரான அர. திருவிடம் அவர்களின் மறைவு தமிழ்ச் சமூகத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் மிகப் பெரும் இழப்பு.

அவர் மறைந்தாலும் அவரது படைப்புகளும் பணியும் திராவிட இயக்கத்தின் தொண்டினையும் வீரமிகு வரலாற்றையும் அடுத்த தலைமுறை இளைஞர்களுக்குத் தொடர்ந்து கொண்டு சேர்க்கும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், திராவிட இயக்க அறிஞர் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## இலக்கிய மாமணி – கழக முன்னோடி மறைந்த

# திருவாரூர் அர.திருவிடத்திற்கு புகழ் வணக்கம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.17–

இலக்கிய மாமணி திருவாரூர் அர.திருவிடம் மறைவுக்கு கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட இயக்க வரலாற்றை 'திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' என்ற தலைப்பில், நூலாகத் தொகுத்து வெளியிட்ட 'இலக்கிய மாமணி' திருவாரூர்

அர.திருவிடம் மறைந்தார்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், திராவிட இயக்கத்துக்கு அடித்தளமிட்ட 'திருவாரூர் தண்டவாளம்' அரங்கராஜன் அவர்களின் மகன் திருவாரூர் அர.திருவிடம் அவர்கள், தன் இளம் வயதில் இருந்தே திராவிட இயக்கத்துக்குப் பாடுபட்டவர். தந்தை பெரியாரால் பெயர் சூட்டப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களால் வளர்த்தெடுக்கப் பட்ட அய்யா திருவிடம் அவர்கள், திருவிடம் என்ற பெயரிலேயே ஒரு மாத இதழை கால் நூற்றாண்டுக்கு மேல் நடத்திய இதழாசிரியர். திருவாரூர் தங்கராசு, ஆசிரியர் கி.வீரமணி, சி.பி.சிற்றரசு, நெ.து.சுந்தரவடிவேலு போன்ற திராவிட இயக்க முன்னோடிகள் பலர், திருவிடம் இதழில், கட்டுரைகள் தீட்டியுள்ளனர்.

தி.மு.கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளராக கழகப் பணியாற்றி வந்த அவர், 'கலகக்காரி', 'கலைஞரின் காலடிச் சுவடுகள்',

'தி.மு.க. பெற்ற வெற்றிகளும் வீரத்தழும்புகளும்', 'திராவிடப் புதையல்' உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். திராவிட இயக்க வரலாற்றைத் தாண்டி, 'குடியுரிமைத் தடுப்புச் சட்டம்', 'காந்தி கோட்சே', 'வேண்டாம் தூக்கு' உள்ளிட்ட சமகால அரசியல் நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

கழக இளைஞர் அணிச் செயலாளராக நான் பொறுப்பேற்ற புதிதில், திராவிட இயக்கத்தின் வரலாற்றைத் தொகுத்து, அவர் எழுதி இருந்த 'திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' புத்தகத்தை, பெரியார் திடலில் வெளியிட்டு உரையாற்றுகிற வாய்ப்பைத் தந்தார். தகவல் களஞ்சியமான அந்நூலை வாசித்து, நான் மேற்கொண்ட தயாரிப்புப் பணிகளை இன்று நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

திருவிடம் அவர்களின் தந்தை அரங்கராஜன் அவர்கள் 1959-இல் மறைந்தபோது, அர.திருவிடத்தின் படிப்பு, குடும்பப் பராமரிப்பு ஆகிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதனாலேயே, 'நான் ஆளாக்கிய பிள்ளை' என்று எப்போதும் திருவிடத்தைக் குறிப்பிடுவார்.

பின்னாளில் பகுத்தறிவுப் பாசறையின் தலைமைக் கழக அமைப்பாளராகவும், தமிழ்நாடு அரசின் சமூக சீர்திருத்தக் குழு உறுப்பினராகவும் இருந்தார் அய்யா அர.திருவிடம். நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு 2022-ஆம் ஆண்டு அவருக்கு 'இலக்கிய மாமணி' விருதையும் வழங்கி கவுரவித்தது.

எழுத்துப் பணியையே தனது இறுதிக்காலம் வரை மேற்கொண்டிருந்த, திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி அண்ணன் திருவாரூர் அர.திருவிடம் அவர்களின் இழப்பு, திராவிட இயக்கத்துக்கு மிகப்பெரிய பேரிழப்பு. அண்ணன் திருவிடத்தை இழந்து வாடும் அவரது அன்புமகன் செழியன் உள்ளிட்ட குடும்பத்தார் நண்பர்கள் கழக உடன் பிறப்புகள் அனைவருக்கும் என்னுடைய ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் தி.மு.க. அயலக அணியின் துணைப் பொறுப்பாளர்

# ச.கமலக்கண்ணன் எழுதிய 'ஜப்பானியப் பழங்குறு நூறு' இலக்கிய நூல் அறிமுக விழா!

## பேராசிரியர் ய.மணிகண்டன் வெளியிட – முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் அறிமுக உரையாற்றுகிறார்! கோவி.லெனின் பங்கேற்பு!

சென்னை, ஆக. 17–

கழக அயலக அணியின் ஜப்பான் கிளையின் துணைப் பொறுப்பாளர் ச. கமலக்கண்ணன் ஜப்பானிய இலக்கியம் ஒன்றுக்குத் தமிழில் வெண்பாவுடன் கூடிய உரையை எழுதியுள்ளார்.

'ஜப்பானிய பழங்குறுநூறு' எனும் இந் நூலின் அறிமுகக்கூட்டம் சென்னை – ஆழ்வார்பேட்டை – சி.ஐ.டி. காலனி பகுதியில் அமைந்துள்ள கவிக்கோ அரங்கத்தில் இன்று (17.8.2025 – ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது.

சென்னைப் பல்கலை தமிழ்மொழித் துறையின் தலைவர் பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் தலைமையில் முனைவர் பாரதி கிருஷ்ண குமார் நூலை அறிமுகப் படுத்தி உரையாற்றுகிறார்.

இயக்கத் தோழர்கள் கோவி. லெனின், வழக்கறிஞர் காந்தி முதலானோர் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் நூலாசிரியர் ச.கமலக்கண்ணன் ஜப்பானிய இலக்கியத்தை அறிமுகம் செய்து ஏற்புரை ஆற்றுகிறார்.

இலக்கிய உலகுக்குப் புதுவரவாக உள்ள இவ்வுரை நூல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸால் பதிப்பிக்கப்பட்டது. இலக்கிய ஆர்வலர்கள் திரளாகப் பங்கேற்கும் இந்நிகழ்வை ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் சென்னைக் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

## தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர்

# திருவாரூர் அர.திருவிடம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, ஆக. 17–

தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளர் திருவாரூர் அர.திருவிடம் அவர்கள், நேற்று (16.8.2025 - சனிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 81.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவிடம் அவர்களின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளராக இருந்து வந்த திருவாரூர் அர.திருவிடம் அவர்கள் மறைவுற்றார்.

1972 ஆம் ஆண்டு 'திருவிடம்' என்ற இதழினைத் தொடங்கி திராவிட இயக்கத்தின் கொள்கைகள், சுயமரியாதைச் சிந்தனைகள் பற்றியும், தந்தை பெரியாரின் கருத்துக்களை முதன்மைப்படுத்தியும் மரபுப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாக வெளியிட்டு வந்த சிறப்புக்குரியவர், திருவிடம் அவர்கள்.

இவர் இயற்றிய "திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை" என 1400 பக்கங்கள் கொண்ட நூலினை கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது பெற்றவர் இவர்.

"இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்", "திமுக பெற்ற வெற்றிகளும் வீரத்தழும்புகளும்" என்பன உள்ளிட்ட பல்வேறு நூல்களையும் எழுதியவர் இவர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

கழகத்தின் மீது அவர் கொண்ட பற்று, தமிழ் இலக்கிய ஆளுமை, எழுத்துத் திறன் கண்டு, அவருக்கு "கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர்" பொறுப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டது முதல், இது வரை, தமது 81வது வயதிலும் தீவிர கழகப் பணியாற்றி வந்தார். திருவிடம் அவர்கள். அவரது மறைவு, கழகத்திற்கு இழப்பு எனின் அது மிகையல்ல.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (17.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருவாரூர், EB காலனியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.